# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 14 மடல் 11 நவம்பர் – 2014 ₹1.00


## கால்நடைப் பராமரிப்புத் துறை ஆணையர் வருகை




மத்திய அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறை ஆணையர் முனைவர் சுரேஷ் எஸ். ஹோனப்ப கோல், மத்திய அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் இணை ஆணையர் முனைவர் வி.கே. அரோரா மற்றும் இணைச் செயலர் திரு. தீரஜ் பாஸ்கர் ஆகியோர் இடம்பெற்ற குழுவினர் 01.10.2014 அன்று கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியைப் பார்வையிட்டனர். கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் கல்லூரியின் செயல்பாடுகள் மற்றும் நிறுவப்பட்டுள்ள பால் பதன்செய் கூடம், பழங்கள் மற்றும் காய்கறி பதன்செய் கூடம், மீன் மற்றும் இறைச்சி பதன்செய் கூடம், வேளாண் பொருட்கள் பதன்செய் கூடம் ஆகியவை குறித்துக் குழுவினர்க்கு விளக்கினார். மேலும், குழுவினர் கல்லூரிப் பேராசிரியர்களுடன் கலந்துரையாடினர்.

## கால்நடை உயிர்த்தொழில்நுட்ப வல்லுனர்க்கான பணி முன்னேற்றச் சிறப்புத் திட்டம் துவக்கம்

கால்நடை மருத்துவத்திற்கான மாற்று ஆய்வு மையம் ஒருங்கிணைந்த கால்நடை உயிர்த்தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான பணி முன்னேற்றச் சிறப்புத் திட்டம் 07.10.2014 அன்று துவக்கியது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர்(பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் திட்டத்தைத் துவக்கிவைத்தார். நிகழ்ச்சியில் மத்திய அரசின் உயிர்த் தொழில்நுட்பத் துறையின் ஆலோசகர் டாக்டர் எஸ்.ஆர். ராவ், பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் கா. குமணன், தொலைநிலைக் கல்வி இயக்குநர் மற்றும் அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் தே. தியாகராஜன் ஆகியோர் பங்கேற்றனர். இத்திட்டத்திற்காகத் தேர்வு செய்யப்பட்ட 10 பேருக்குத் தொழில்நுட்ப மேலாண்மை, ஜிஎல்பி தேவைகள், உயிர்ப் பாதுகாப்பு, ஐபிஆர் ஆகியவை குறித்து 6 மாதக் காலத்திற்குப் பயிற்சியளிக்கப்பட உள்ளது. இவர்களுக்கு மத்திய அரசின்




உயிர்த் தொழில்நுட்பத் துறை உதவித் தொகை அளிக்கும். கால்நடை மருத்துவத்திற்கான மாற்று ஆய்வு மையத்தில் உருவாக்கப்பட்ட 'கொல்லஜன் அடிப்படையாகக் கொண்ட மருந்துப்பசை' தொழில்நுட்பம் சென்னையைச் சார்ந்த ஸிகில் ஃபார்மா கம்பானியன் ஹெல்த் டிவிஷன் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்டது.

## மண்டலப் பயிலரங்குகள்

பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககமானது கால்நடை வளர்ப்பு, கால்நடை நலம் ஆகியவற்றில் களப்பணிக் கால்நடை மருத்துவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை மண்டலம் சார்ந்த இனங்கண்டு, தீர்வுகாணும் வகையில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களும் பயன்பெறும் வகையில் "கால்நடை வளர்ப்பு மற்றும் சிகிச்சையில் ஏற்படும் களப் பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள்" தொடர்பாக ஆறு மண்டலப் பயிலரங்குகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது. இது தொடர்பான முதல் மண்டலப் பயிலரங்கு, வேலூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள காயிதே மில்லத் நினைவரங்கத்தில் 07.10.2014 அன்று நடைபெற்றது. பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்து, துவக்கவுரை ஆற்றினார். அவர் தமது உரையில் தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறை மற்றும் ஆவின் துறைசார்ந்த அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்து, அண்மைக் காலங்களில் இந்தியாவில் உணவுத் தானிய உற்பத்தி குறைந்து வருகிற நிலையில் கால்நடை




வளர்ப்பு விவசாயிகளுக்கு நிலையான வாழ்வாதாரத்தை அளிக்கிறது என்றார். மேலும், கள நிலையில் பயன்படுத்தத் தக்க பல்வேறு தொழில்நுட்பங்களைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளதைச் சுட்டிக்காட்டினார். விரிவாக்கக் கல்வி இயக்குநர் அவர்கள் 17.10.2014அன்று சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கலையரங்கில் “இரண்டாவது மண்டலப் பயிலரங்கை” துவக்கிவைத்தார். கோயம்புத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் 28.10.2014அன்று கோயம்புத்தூர், வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மாநாட்டுக்கூடத்தில் “மூன்றாவது மண்டலப் பயிலரங்கு” துவக்கிவைக்கப்பட்டது. பயிலரங்குகளில் பல்கலைக்கழக வல்லுனர்களின் விரிவுரை இடம்பெற்றதோடு கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. வேலூரில் நடைபெற்ற பயிலரங்கில் ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் இயக்குநர் முனைவர் எம். முருகன் அவர்கள் “பசுந்தீவன உற்பத்தி” குறித்து விரிவுரை வழங்கினார். கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள், ஆவின் நிறுவனத்தைச் சார்ந்த துணைப் பொது மேலாளர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோர் பயிலரங்குகளில் பங்கேற்றுக் கருத்துரை வழங்கினர். வேலூர், சேலம் மற்றும் கோயம்புத்தூரில் நடைபெற்ற பயிலரங்குகளில் முறையே 69, 85, 105 களப்பணிக் கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர்.

## கல்வி நிலையப் பணி

### சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி

### கல்லூரி நாள் விழா

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கல்லூரி நாள் விழா 31.10.2014அன்று கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் பி. வணங்காமுடி அவர்கள் விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, கல்லூரி மலர் தொகுதி டுஒஐஏ வெளியிட்டு, 2013ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆசிரியர், சிறந்த முதுநிலைப் பட்ட மாணவர் மற்றும் சிறந்த நாட்டுநலப் பணித் திட்டத் தன்னார்வலர், இளநிலைப் பட்டப் படிப்பில் ஐ, ஐஐ, ஐஐஐ, ஐஏ, ஏஆண்டில் முதலிடம் பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி உரையாற்றினார். பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, தலைமையுரை ஆற்றினார். கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் கல்லூரி ஆண்டறிக்கை–2013–2014 அளித்தார். கல்லூரி மலரின் ஆசிரியர் முனைவர் எஸ்.எம்.கே. கார்த்திகேயன் அவர்கள் கல்லூரி மலர் குறித்து எடுத்துரைத்தார். கல்லூரியின் மாணவர் சங்கத் துணைத் தலைவர் முனைவர் எஸ்.என். சிவசெல்வம் அவர்கள் பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டையொட்டி நடத்தப்பட்ட கல்லூரிகளுக்கு இடையிலான “பெலிசிட்டாஸ்




’14, வெட்பெஸ்ட்” போட்டிகள் மற்றும் இறுதியாண்டு மாணவர்கள் ஏற்பாடு செய்த வகுப்புகளுக்கு இடையேயான “எக்ஸ்ப்ளோரா ’14” கலைநிகழ்ச்சிகள் குறித்து பேசினார். கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் என். நடராஜன், கால்நடை ஒட்டுண்ணியல் துறையின் முன்னாள் தலைவர் மற்றும் பேராசிரியர் முனைவர் ஆர். ஆனந்தன் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்று, கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்று வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினர். கலைநிகழ்ச்சிகளில் ஒட்டுமொத்த வாகையர் பட்டத்தை நான்காம் ஆண்டு மாணவர்கள் வென்றனர். கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. முன்னதாக, இறுதியாண்டு மாணவர்கள் செல்வன் பி. அருண் வரவேற்புரையும், இறுதியில் செல்வன் எம். சமீர் அலி நன்றியுரையும் வழங்கினர்.

### பசுந்தீவன உற்பத்தி குறித்துக் கால்நடை உதவி மருத்துவர்களுக்குப் பயிற்சி

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் உழவியல் துறைமூலம் தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் நிதியுதவியில் “பசுந்தீவன உற்பத்தித் தொழில்நுட்பங்களில் குறிப்பாகப் பண்ணை இயந்திரமயமாக்கல், நுண்ணீர்ப் பாசன முறை மற்றும் மேய்ச்சல் நில மேலாண்மை” குறித்த பயிற்சித் திட்டம், தமிழக அரசின் கால்நடை உதவி மருத்துவர்களுக்காகச் செயல்படுத்தப்பட்டது. இந்தப் பயிற்சி திட்டமும் ஐந்து நாட்கள் என மொத்தம் ஒன்பது தொகுதியாக மே, 2014 முதல் அக்டோபர், 2014 வரை நடைபெற்றது. ஒன்பது தொகுதிப் பயிற்சியின் நிறைவு விழா 31.10.2014அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்



தொலைநிலைக் கல்வி இயக்குநர் மற்றும் அடிப்படை அறிவியல் புல முதல்வர்(பொ.) முனைவர் தே. தியாகராஜன் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று, கால்நடை வளர்ப்போர் பயனடையும் வகையில் தொழில்நுட்பத்தைப் பரவலாக்க வேண்டும் என்று வலியுறுத்திப் பேசினார். கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வ.மீ. சங்கரன் அவர்கள் பயிற்சியை ஒருங்கிணைத்தார்.

## பருவநிலை மாற்றம் குறித்த தேசியப் பயிலரங்கு

கல்லூரியின் கால்நடை உற்பத்தி மற்றும் மேலாண்மைத் துறைமூலம் “ஊரக வாழ்வாதாரம் மற்றும் கால்நடை வளர்ப்பில் பருவநிலை மாற்றம்” குறித்த தேசியப் பயிலரங்கு 11.10.2014அன்று நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத் துணைவேந்தர்(பொ.) முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்து, துவக்கவுரை ஆற்றினார். கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். பயிலரங்க அமைப்புச் செயலாளர் மற்றும் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் தங்க தமிழ்வாணன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு, கேரளா, ஆந்திர பிரதேசம் மற்றும் கர்நாடகாவைச் சார்ந்த 120 பேர் பயிலரங்கில் பங்கேற்றனர்.

## குறுகிய காலப் பயிற்சி

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியில் “மாட்டின இனப்பெருக்க உயிர்த் தொழில்நுட்பங்களில் முன்னேற்றங்கள்: கட்டுப்படுத்தப்பட்ட இனப்பெருக்கம் முதல் க்ளோனிங் வரை” குறித்த குறுகிய காலப்பயிற்சி, கல்லூரியின் கால்நடை உயிர்த் தொழில்நுட்பத் துறைமூலம் 09.09.2014முதல் 18.09.2014வரை நடத்தப்பட்டது. இனப்பெருக்க உயிர்த் தொழில்நுட்பத்தில் அண்மைக்கால முன்னேற்றங்களை எடுத்துக்காட்டும் வகையில் விரிவுரைகள், செயல்முறை விளக்கங்கள், கலந்துரையாடல்கள் ஆகியவை பயிற்சியில் இடம்பெற்றன. அமெரிக்காவின் பர்தே பல்கலைக்கழகத்தின் கால்நடை இனப்பெருக்கத் துறைப் பேராசிரியர் முனைவர் ஏ.டி. பீட்டர், வாரணாசி இந்து பனாரஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் முனைவர் ரமாதேவி ஆகியோர் சிறப்பு விரிவுரை வழங்கினர். 18.09.2014அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் அடிப்படை அறிவியல் புல முதல்வர்(பொ.) முனைவர் தே. தியாகராஜன் அவர்கள் வாழ்த்துரை வழங்கிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பயிற்சி இயக்குநர் மற்றும் கால்நடை உயிர்த் தொழில்நுட்பத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஏ. பழனிசாமி அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார்.

## தகவல் பரிமாற்றத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

கல்லூரியின் கால்நடை வணிக மேலாண்மைத் துறைமூலம் “தகவல் பரிமாற்றத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி” 17.10.2014 மற்றும் 18.10.2014ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் பி.டெக். இறுதியாண்டு பயிலும் 17 மாணவர்கள் மற்றும் எம்.டெக். பயிலும் 15 மாணவர்கள் பயிற்சியில் பங்கேற்றனர். நிறுவனப் பயிற்றுநர் திரு. ஜெ. ரவீந்திரன் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நிறுவனத் தொடர்புப் பிரிவின் வேலைவாய்ப்பு இணை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் டி. கலைச்செல்வன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். நிறைவு விழாவில் கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் நிறைவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பயிற்சியின் அமைப்புச் செயலாளர் மற்றும் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் பயிற்சியை ஒருங்கிணைத்தார்.

## வனவிலங்கு வார விழா–2014




கல்லூரியில் 2014ஆம் ஆண்டின் வனவிலங்கு வார விழா 07.10.2014அன்று கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகத் துணைவேந்தர்(பொ.) முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, “வனவிலங்குச் செய்தியேடு” மற்றும் “வனவிலங்கு குறித்த வினா வங்கி” புத்தகத்தை வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். சென்னை, வருமான வரித்துறையின் கூடுதல் ஆணையர்(கண்காணிப்பு) டாக்டர் வி. விவேகானந்தன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கி, சிறப்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் ச.அ. அசோகன், பல்கலைக்கழகச் சிகிச்சையியல்

இயக்குநர்(பொ.) முனைவர் சொ.ரா. சீனிவாசன், வனவிலங்குச் சங்கத் தலைவர் மற்றும் அடிப்படை அறிவியல் புல முதல்வர்(பொ.) மற்றும் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன் ஆகியோர் வனவிலங்குப் பாதுகாப்பு குறித்து உரையாற்றினர். முன்னதாக, கல்லூரியின் வனவிலங்கு அறிவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம்.ஜி. ஜெயதங்கராஜ் அவர்கள் வனவிலங்குச் சங்கத்தின் சார்பில் வரவேற்புரை ஆற்றினார்.

### முன்னெச்சரிக்கை வெறிநோய்த் தடுப்பு மருந்து அளித்தல் நிகழ்ச்சி

பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாகச் சிகிச்சையியல் பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களுக்கு முன்னெச்சரிக்கை வெறிநோய்த் தடுப்பு மருந்து அளித்தல் நிகழ்ச்சி, கல்லூரியின் கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வாய்வியல் துறைமூலம் 05.10.2014அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். மொத்தம் 93 மாணவர்கள், பல்வேறு துறைகளின் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தடுப்பு மருந்து அளிக்கப்பட்டது. துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எல். குணசீலன் அவர்கள் பயிற்சியை ஒருங்கிணைத்தார்.

## நாமக்கல் , கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### கதழ்ஒலி ஆய்வில் தொழில்நுட்பப் பயிற்சி

பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநரகம் சார்பில் கல்லூரியின் கால்நடை மருத்துவச் சிகிச்சை, நன்னெறி மற்றும் சட்டவியல் துறையில் “கதழ்ஒலி ஆய்வில் தொழில்நுட்பப் பயிற்சி” 06.10.2014–10.10.2014 மற்றும் 27.10.2014–31.10.2014 ஆம் தேதிகளில் நடைபெற்றது. பயிற்சியில் தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்த 10 களப்பணிக் கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் பயிற்சி முடித்தவர்களுக்குச் சான்றிதழ், கதழ்ஒலி தொழில்நுட்பம் பற்றிய கையேடு மற்றும் குறுந்தகடு ஆகியவற்றை வழங்கினார்.

## திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### இலவச வெறிநோய்த் தடுப்பூசி முகாம்

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் “தமிழ்நாட்டில் ராஜபாளையம் மற்றும் கன்னி இன வேட்டை நாய்களின் குணாதிசயங்கள்” குறித்த பல்கலைக்கழக ஆராய்ச்சிச் சுழல் நிதித் திட்டத்தில் வேட்டை நாய்களுக்கான இலவச வெறிநோய்த் தடுப்பூசி முகாம், தூத்துக்குடி



மாவட்டம் சுரைக்காய்ப்பட்டி கிராமத்தில் 01.10.2014அன்று நடத்தப்பட்டது. மத்திய அரசின் உயிர்த் தொழில்நுட்பத் துறையின் ஆலோசகர் டாக்டர் எஸ்.ஆர். ராவ் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்து, “வேட்டை நாய் இனங்களின் பாதுகாப்பிற்கு” தமது துறை நிதியுதவி அளிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் கா. குமணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். வெறிநோய்க்கு எதிராக 270 கன்னி இன நாய்களுக்குத் தடுப்பூசி அளிக்கப்பட்டது.

### விரிவாக்கப் பணிகள்

கல்லூரிமூலம் தமிழ்நாடு அரசின் கோழியின மேம்பாட்டுத் திட்டப் பயனாளிகள் 47 பேருக்கு 29.10.2014முதல் 31.10.2014வரையில் “கறிக்கோழி வளர்ப்பு” வளாகப் பயிற்சியும், நபார்டு நிதியுதவியில் கறவை மாடு வளர்க்கும் 200 பேருக்காக 10.10.2014, 13.10.2014, 17.10.2014 மற்றும் 24.10.2014ஆம் தேதிகளில் முறையே சொக்கட்டான்தோப்பு, தச்சநல்லூர், களக்குடி மற்றும் அயன்சிங்கம்பட்டியில் “தனுவாஸ் தாதுஉப்புக் கலவை” குறித்த நான்கு விழிப்புணர்வு முகாம்களும் நடத்தப்பட்டன. கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் நிகழ்ச்சிகளில் பங்கேற்றுப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்களும் இடுபொருட்களும் வழங்கினார். மேலும், புதுவாழ்வுத் திட்டத்தின்கீழ் “மதிப்புக் கூட்டிய பால்பொருட்கள் தயாரிப்பு” குறித்த செயல்முறை விளக்கமும் பயிற்சியும் 5 கிராமங்களில் அளிக்கப்பட்டன. இதோடு “மரபுசார் கால்நடை மருத்துவம்”, “வெண்பன்றி வளர்ப்பு”, “நாட்டுக்கோழி வளர்ப்பு” குறித்த பயிற்சிகளும், தேசிய புரோட்டீன் அளித்தல் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி கால்நடைப் பராமரிப்புத் துறையுடன் இணைந்து “வெள்ளாடு வளர்ப்பு” குறித்த இரு நாள் பயிற்சியும், மாவடியில் கால்நடை நல முகாமும் நடத்தப்பட்டன. மேலும், மதுரை கோவினன்ட் மையம் மற்றும் திருநெல்வேலி சுஜ்லோன் பவுண்டேஷனுடன் இணைந்து “மரபுசார் கால்நடை மருத்துவம்” குறித்த பயிற்சியும் நடத்தப்பட்டது. இவற்றால் 743 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர். 434 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

## ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### முதலாண்டு மாணவர்களுக்கான அறிமுக விழா




கல்லூரியில் 09.10.2014 அன்று 2014–15 ஆம் ஆண்டு இளநிலைக் கால்நடை மருத்துவ மாணவர்களுக்கான அறிமுக விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் சி. வீரபாண்டியன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, மாணவர்கள் படிப்பில் தீவிரக் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்திப் பேசினார். மாணவர் பேரவை துணைத் தலைவர் முனைவர் அ. முகம்மது சபியுல்லா அவர்கள் கால்நடை மருத்துவம் மற்றும் தேர்வுகள் குறித்து எடுத்துரைத்தார். விடுதிக்காப்பாளர் முனைவர் ஒ.ரா. சத்தியமூர்த்தி அவர்கள் விடுதியில் உள்ள வசதிகள், விடுதிக் கட்டுப்பாடுகள் பற்றி எடுத்துரைத்தார். முனைவர் ஆர். ரிச்சர்ட் சர்ச்சில், முனைவர் முகம்மது சபிஉஷாமா, முனைவர் அ. ரமேஷ், முனைவர் ந. ஜெயதிலகன், முனைவர் ப. தேவேந்திரன் மற்றும் முனைவர் வ. ரங்கநாதன் ஆகியோர் கல்லூரியின் கற்பிக்கும் கால்நடைச் சிகிச்சை வளாகம், கற்பிக்கும் கால்நடைப் பண்ணை வளாகம், ஆராய்ச்சிகூட வசதிகள், நூலக வசதி, விளையாட்டு மற்றும் நாட்டுநலப் பணித் திட்டம் ஆகியவை பற்றி எடுத்துரைத்தனர். முதலாமாண்டு மாணவர்களுக்கான ஆசிரியர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். முன்னதாக, 2014–15 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஜெ. செல்வராஜ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். மாணவர்களுக்கு கல்லூரி வளாகத்தில் உள்ள பல்வேறு துறைகள் காண்பிக்கப்பட்டன.

### கல்லூரி அளவிலான உடற்செயலியல் வினாவிடைப் போட்டி

இந்திய விலங்கு உடற்செயலியல் வல்லுனர்கள் சங்கம் சார்பில், கால்நடை உடற் செயலியல் பாடத்தில் கல்லூரி அளவிலான வினாவிடைப் போட்டி 09.10.2014 அன்று நடத்தப்பட்டது. போட்டியில் நான்கு மாணவர் அணிகள் கலந்து கொண்டன. இதில் மு. சபரிஅருள் மற்றும் கு.ஆனந்தி அடங்கிய மாணவர் அணி வெற்றிபெற்றதோடு மட்டுமல்லாமல், கேரளா மாநிலம், திருச்சூர் மன்னுத்தியிலுள்ள கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற தென்மண்டல அளவிலான கால்நடை உடற்செயலியல் வினாவிடைப் போட்டியில் கல்லூரியின் சார்பாகப் பங்கேற்றனர். கால்நடை உடற்செயலியல் மற்றும் உயிர்வேதியியல் துறையினைச் சார்ந்த ஆசிரியர்கள் கல்லூரி அளவிலான வினாவிடைப் போட்டியை நடத்தினர்.

## கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி

### உலக உணவு நாள் – 2014



கல்லூரியில் 16.10.2014 அன்று உலக உணவு நாள் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி மாநிலம் தழுவிய வரைப்பட போட்டி, சுவரிதழ் போட்டி, குறும்படப் போட்டிகள் நடத்தப்பட்டன. பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த சுமார் 300 மாணவ, மாணவிகள் போட்டிகளில் கலந்துகொண்டனர். கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். 3எப் தொழிற்சாலை லிமிடெட் நிறுவன இயக்குநர் திரு. எஸ். பி. கோயங்கா அவர்கள் சிறப்புரையாற்றினார். தமிழக அரசின் முன்னாள் நிதிச் செயலர் முனைவர் ஏ. எம். சுவாமிநாதன் இ.ஆ.ப., அவர்கள் உலக உணவு நாள் குறித்த “புட் ஃபியஸ்டா – விட்சுயல்ஸ்” நூல் வெளியிட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். கல்லூரியின் இறுதியாண்டு மாணவி செல்வி எஸ். பூரணி நன்றி கூறினார்.

## விரிவாக்கப் பணி

### செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின்மூலம் கால்நடைப் பண்ணை மேலாளர், வெள்ளாடு வளர்ப்பு, பசுந்தீவனம் மற்றும் பசுந்தீவன விதை உற்பத்தி, கறவைமாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, உறைமோர்மூலம் பால் பொருட்கள் தயாரிப்பு, தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆகிய செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள் தருமபுரி, ஈரோடு, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்; நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைத்

தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வகம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் பால்வள அறிவியல் துறை, மாதவரம் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை ஆகியவற்றில் அக்டோபர் 2014இல் நடத்தப்பட்டன. பயிற்சிகளில் 20 பேர் பதிவுசெய்து பயிற்சியை நிறைவுசெய்தனர்.

### பயிற்சி

- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் 16.10.2014 முதல் 18.10.2014 வரை கரூர் மாவட்டக் கால்நடை பராமரிப்புத் துறையினால் தேர்வு செய்யப்பட்ட 62 மற்றும் 13 தமிழக அரசின் கோழி வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டப் பயனாளிகளுக்காக "பண்ணை முறையில் நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் கறிக்கோழி வளர்ப்பு" பயிற்சிகள் நடைபெற்றன. கரூர், கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் டாக்டர் தங்கராஜ் மற்றும் உதவி இயக்குநர் டாக்டர் என். குழந்தைசாமி ஆகியோர் பங்கேற்று, கோழி வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் விதிகள், நன்மை மற்றும் மானியம் குறித்து விளக்கிப் பேசினர். பயிற்சியின் நிறைவில் பயனாளிகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

- இராஜபாளையம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் தமிழக அரசின் கோழியின மேம்பாட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு "கறிக்கோழி வளர்ப்பு" பயற்சி 13.10.2014 முதல் 15.10.2014வரை அளிக்கப்பட்டது. விருதுநகர் மாவட்டத்தின் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் டாக்டர் முகமது கனி மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் கால்நடைப் பராமரிப்புத் துறையின் உதவி இயக்குநர் டாக்டர் சஞ்சீவிராஜ் ஆகியோர் பயிற்சியின் நிறைவு விழாவில் பங்கேற்றுச் சான்றிதழ்கள் வழங்கினர்.

- காஞ்சிபுரம், உழவர் பயிற்சி மையம்மூலம் "அறிவியல் முறையில் வெள்ளாடு வளர்ப்பு" பயிற்சி 152 பண்ணை மகளிர்க்காகப் பொன்னேரியில் 28.10.2014அன்று நடத்தப்பட்டது. மேலும், காஞ்சிபுரம், இந்த்சேதி அமைப்புடன் இணைந்து "கறவை மாடு வளர்ப்பு மற்றும் தூய பால் உற்பத்தி" பயிற்சி 29.10.2014முதல் 31.10.2014வரை நடத்தப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த 25 கறவை மாடு வளர்க்கும் மகளிர் பயிற்சியில் பங்கேற்றனர்.



- மேல்மருவத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் "வெள்ளாடு வளர்ப்பு" பயிற்சி, நான்கு பிரிவாக அக்டோபர் 2014இல் நடத்தப்பட்டது. உத்திரமேரூர் மற்றும் மதுராந்தம் வட்டங்களைச் சார்ந்த 102 பயனாளிகள் பயிற்சியில் பங்கேற்றனர்.

## நாட்டுநலப் பணித் திட்டம்

### செஞ்சுருள் சங்கம் – துவக்க விழா




ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வுக்கான செஞ்சுருள் சங்கம் 07.10.2014அன்று துவக்கப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் சி. வீரபாண்டியன் அவர்கள் எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வு குறித்து நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கித் தலைமையுரை ஆற்றினார். பல்கலைக்கழக நாட்டுநலப் பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் செ. மீனாட்சி சுந்தரம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தஞ்சாவூர் எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு அமைப்பின் நிர்வாகி திரு. ப. மாதவன் அவர்கள் மாணவர்களிடம் கலந்துரையாடினார்.

தேசிய நிவாரண நிதிக் நன்கொடை

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டு நலப்பணித் திட்டம் பிரிவு ஐ மற்றும் ஐஐின் மூலமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் நிவாரணப் பணிகளுக்காக இக்கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபாய் 15,875/– க்கான நன்கொடை "பிரதம மந்திரியின் தேசிய நிவாரண நிதி" என்னும் பெயரில் வரைவுக் காசோலையாக மாற்றப்பட்டு, நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் மூலம் கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்களிடம் 16.10.2014அன்று அளிக்கப்பட்டது.

## தானுவாஸ் முன்னாள் மாணவர் சங்கக் கட்டடத்திற்கான நன்கொடை வழங்கியோர்

| வ.எண். | பெயர் | ₹ |
|---|---|---|
| 1. | திரு. அப்துல் ரியாஸ், M | 1923 |
| 2. | மரு. அமுதா, R | 3321 |
| 3. | மரு. ஆனந்த பிரகாஷ் சிங், D | 3570 |
| 4. | மரு. ஆனந்தி, M | 1543 |
| 5. | மரு. அப்பாராவ், V | 4245 |
| 6. | மரு. அறிவுச்செல்வன், A | 2336 |
| 7. | மரு. அருண், L. | 1480 |
| 8. | மரு. அருண்மொழி, N | 2066 |
| 9. | மரு. அசோக்குமார், M | 1500 |
| 10. | மரு. அசோக், A | 3241 |
| 11. | மரு. அசோகன், S | 5249 |
| 12. | மரு. அழகியநம்பி, P | 1827 |
| 13. | மரு. பாபு, M | 5260 |
| 14. | மரு. பேகன், S | 4402 |
| 15. | மரு. பாக்கியராஜ், S | 1555 |
| 16. | மரு. பாலசந்திரன், C | 5393 |
| 17. | மரு. பாலசுப்பிரமணியன், S | 3992 |
| 18. | மரு. பாஸ்கரன், D | 4106 |
| 19. | மரு. பாஸ்கரன் ரவி லதா | 4106 |
| 20. | மரு. புவனா, M | 1484 |
| 21. | மரு. பினோசுந்தர், S.T. | 1735 |
| 22. | மரு. பிருந்தா, K | 2074 |
| 23. | மரு. காவேரி, D | 2074 |
| 24. | மரு. சிசிலியா ஜோசப் | 4225 |
| 25. | மரு. சந்திரசேகரன், V | 1939 |
| 26. | மரு. சின்னமணி, K | 1884 |
| 27. | மரு. க்ளமெண்ட் எபினேசர் ஹென்றி, A | 1527 |
| 28. | மரு. டேனியல் ஜாப் சந்திரன் | 5217 |
| 29. | மரு. தனபதி, D | 10000 |
| 30. | மரு. தர்மசீலன், S | 3570 |
| 31. | மரு. துரைசாமி, K.A | 5035 |
| 32. | மரு. இளங்கோ, A | 3671 |
| 33. | மரு. இசக்கியேல் நெப்போலியன், R | 4027 |
| 34. | மரு. எழில்வளவன், S | 3210 |
| 35. | மரு. எழில்வேலன், S | 2145 |
| 36. | மரு. கோமதிநாயகம், S | 4225 |
| 37. | மரு. கோபி, H | 3990 |
| 38. | மரு. கோபிநாதன், A | 2017 |
| 39. | மரு. குணசீலன், L | 4000 |
| 40. | மரு. ஜெகதீஸ்வரன், A | 3225 |
| 41. | மரு. ஜெய்சங்கர், S | 2070 |
| 42. | மரு. ஜெயவரதன், B | 1598 |
| 43. | மரு. ஜெயகுமார், K | 1939 |
| 44. | மரு. ஜெயந்தி, D | 1940 |
| 45. | மரு. ஜெயந்தி, N | 2443 |
| 46. | மரு. ஜெயசித்ரா, V | 2570 |
| 47. | மரு. ஜான் கிருபாகரன், J | 4321 |
| 48. | மரு. ஜோதிலட்சுமி, M. | 1484 |
| 49. | மரு. கலைக்கண்ணன், A | 1939 |
| 50. | மரு. கலைச்செல்வி, G | 1598 |
| 51. | மரு. கனகராஜு, P | 2017 |
| 52. | மரு. கண்ணன், D | 3132 |
| 53. | மரு. கார்த்தியாயினி, A | 2073 |
| 54. | மரு. கார்த்திகேயன், S.M.K. | 3665 |
| 55. | மரு. கார்த்திகேயன், B | 1555 |
| 56. | மரு. கார்த்திகேயன், N | 2004 |
| 57. | மரு. கதிரவன், G | 3398 |
| 58. | மரு. கவிதா, K.T. | 1688 |
| 59. | மரு. கிருஷ்ணகுமார், K | 3994 |
| 60. | மரு. கிருஷ்ணன், R. | 10000 |
| 61. | மரு. கீர்த்திகா, K | 1634 |
| 62. | மரு. குலசேகர், K | 4283 |
| 63. | மரு. குமாரவேலு, N | 3769 |
| 64. | மரு. குமரேசன், A | 1939 |
| 65. | மரு. குமரேசன், G | 3431 |
| 66. | மரு. மலர்மதி, M | 1555 |
| 67. | மரு. மணிவண்ணன், A | 3210 |
| 68. | மரு. மனோகரன், S | 3494 |
| 69. | மரு. மனோகரன், S | 1839 |
| 70. | மரு. மணியம், K.S. | ஸ்ரீ300 |
| 71. | மரு. மார்க்ஸ் நிர்மல், சு | 1777 |
| 72. | திருமதி. மாதங்கி, S.K. | 1598 |
| 73. | மரு. மதியழகன், P | 5000 |
| 74. | மரு. மீனாட்சி சுந்தரம், S | 3787 |
| 75. | மரு. மேகலா, C | 1527 |
| 76. | மரு. மெய்ஞானலட்சுமி, S | 3210 |
| 77. | மரு. மேகலா, P | 1883 |
| 78. | மரு. மூக்கப்பன், M | 10000 |
| 79. | மரு. மூர்த்தி, M | 3587 |
| 80. | மரு. முரளி, N | 3800 |
| 81. | மரு. முரளிதரன், J | 3225 |
| 82. | மரு. முருகன், B | 3400 |
| 83. | மரு. முருகன், M | 3300 |
| 84. | மரு. முருகன், M | 5155 |
| 85. | மரு. முந்துரமலிங்கம், T | 1595 |
| 86. | மரு. முத்துசாமி, N | 1530 |
| 87. | மரு. முத்துசாமி, P | 2250 |
| 88. | மரு. மைனாவதி, V.S | 1830 |
| 89. | மரு. நாகராஜன், K | 2133 |
| 90. | மரு. நஞ்சப்பன், K | 5142 |
| 91. | மரு. நரந்திரபாபு, R | 3880 |
| 92. | மரு. நர்மதா, N | 3552 |
| 93. | மரு. ஓம்பிரகாஷ், A.V | 4120 |
| 94. | மரு. பழனிசாமி, A | 4201 |
| 95. | மரு. பாண்டியன், C | 3237 |
| 96. | மரு. பரமசிவம், A | 2172 |
| 97. | மரு. பார்த்திபன், M | 4106 |
| 98. | மரு. பீர் முஹமது, S | 11000 |
| 99. | மரு. பொற்டீன், K | 1500 |
| 100. | மரு. போத்தியப்பன், P | 1598 |
| 101. | மரு. பிரபாகரன், V | 2110 |
| 102. | மரு. பிரபாகரன், R | 15000 |
| 103. | மரு. பிரபாகர், T.G | 4000 |
| 104. | மரு. பிரபு, M | 3303 |
| 105. | மரு. பிரேமவல்லி, K | 2190 |
| 106. | மரு. புகழேந்தி, T.R | 3303 |
| 107. | மரு. புஷ்பநாதன், K.R | 1764 |
| 108. | மரு. ராஜா, A | 3771 |
| 109. | மரு. ராஜா, M.J | 1939 |
| 110. | மரு. ராஜலட்சுமி (எ) ராதாபாய் | 1771 |
| 111. | மரு. ராஜேந்திரகுமார், K | 1500 |
| 112. | மரு. ராஜேந்திரன், K | 1884 |
| 113. | மரு. ராமதாஸ், P | 1000 |
| 114. | மரு. ரமணி, R | 1837 |
| 115. | மரு. ராமசாமி, D | 4319 |
| 116. | மரு. ரமேஷ் சரவணகுமார், V | 4149 |
| 117. | மரு. ரமேஷ், S | 3500 |
| 118. | மரு. ரம்யா, K | 1750 |
| 119. | மரு. ரங்கசாமி, S | 1742 |
| 120. | மரு. ரத்தினபிரபா, S | 2249 |
| 121. | மரு. ரவி, R | 5003 |
| 122. | மரு. ரவிகுமார், K | 1884 |
| 123. | மரு. ரீனா, D | 1837 |
| 124. | மரு. ரேவதி, K | 10000 |
| 125. | மரு. ரிச்சர்டு ஜெகதீசன், P.N | 3801 |
| 126. | மரு. ரீத்தா நாராயணன் | 3210 |
| 127. | மரு. ராபின்சன் ஜெ அப்ரகாம் | 4595 |
| 128. | மரு. சதாசிவம், P | 5000 |
| 129. | மரு. சக்திவடிவு, R | 1555 |
| 130. | மரு. சக்திவேல், K.M | 2054 |
| 131. | மரு. சக்திவேலன், S.M | 2433 |
| 132. | மரு. சங்கரன், A | 3665 |
| 133. | மரு. சங்கரன், V.M | 4123 |
| 134. | மரு. சங்கரநாராயணன்,A | 10000 |
| 135. | மரு. சாந்தி, D | 1884 |
| 136. | மரு. சத்தியமூர்த்தி, T | 3303 |
| 137. | மரு. சத்தியபாமா, T | 1830 |
| 138. | மரு. சேகர், M | 4000 |
| 139. | மரு. செல்வகுமார், K.N | 4595 |
| 140. | மரு. செல்வம், S | 3988 |
| 141. | மரு. செல்வன், S.T | 4110 |
| 142. | மரு. செல்வன், P | 2070 |
| 143. | மரு. செல்வராஜ், M | 3694 |
| 144. | மரு. செல்வராஜ், P | 3694 |
| 145. | மரு. செல்வராஜ், P | 5000 |
| 146. | மரு. செந்தில் குமார், K | 1690 |
| 147. | மரு. செந்தில் குமார், P | 1940 |
| 148. | மரு. செந்தில் குமார், S | 2172 |
| 149. | மரு. செந்தில் குமார், T.M.A | 3563 |
| 150. | மரு. செந்தில் குமார், V | 1939 |
| 151. | மரு. செந்தில் குமார், G | 1908 |
| 152. | மரு. சேர்ம சரவண பாண்டியன், A | 2228 |
| 153. | மரு. சம்சுதீன், P | 3225 |
| 154. | மரு. சாந்தி, K | 3225 |
| 155. | மரு. சித்தார்த், M | 2495 |
| 156. | திருமதி. சித்தி ஜெகன்னாரா, M | 2165 |
| 157. | மரு. சிவகுமார், P | 1527 |
| 158. | மரு. சிவகுமார், T | 4628 |
| 159. | மரு. சிவராமன், S | 1617 |
| 160. | மரு. சிவசெல்வம், S.N | 4752 |
| 161. | மரு. சௌந்தராஜன், C | 3665 |
| 162. | மரு. ஸ்ரீகுமார், C | 3770 |
| 163. | மரு. ஸ்ரீதர், R | 4243 |
| 164. | மரு. சீனிவாசன், S.R | 5000 |
| 165. | மரு. சுப்ரமணியன், A | 4205 |
| 166. | திருமதி. சுதா, K | 2067 |
| 167. | பொறி. சுஜாதா, G | 1750 |
| 168. | மரு. சுந்தரராமன், M.N | 4303 |
| 169. | மரு. சுந்தரேசன், A | 2017 |
| 170. | மரு. சுரேந்தரராஜ், A | 2073 |
| 171. | மரு. சுரேஷ் கண்ணன், S | 2430 |
| 172. | மரு. சுரேஷ் குமார், K | 2070 |
| 173. | மரு. சுரேஷ் குமார், S | 3042 |
| 174. | மரு. சுரேஷ் சுப்ரமணியன், B | 3990 |
| 175. | மரு. டென்சிங் ஞானராஜ், P | 3774 |
| 176. | மரு. தங்க தமிழ்வாணன் | 4365 |
| 177. | மரு. தங்கபாண்டியன், M | 1971 |
| 178. | மரு. தங்கவேல், K | 1665 |
| 179. | மரு. தங்கவேலு, A | 4225 |
| 180. | மரு. தவசியப்பன், V | 1839 |
| 181. | மரு. தென்னரசு, A | 2324 |
| 182. | மரு. தியாகராஜன், R | 3300 |
| 183. | மரு. திருநாவுக்கரசு, D | 1830 |
| 184. | மரு. திருநாவுக்கரசு, P | 2017 |
| 185. | மரு. திருநாவுக்கரசு, P | 1500 |
| 186. | மரு. திருவேங்கடம், A.K | 3676 |
| 187. | மரு. தியாகராஜன், D | 5252 |
| 188. | மரு. உமா, V | 1884 |
| 189. | மரு. வடிவு, V.S | 2017 |
| 190. | மரு. வசந்த குமார், T | 1484 |
| 191. | மரு. வசந்தி சுரேஷ் | 1598 |
| 192. | மரு. வேதநாயகம், K | 10000 |
| 193. | மரு. வீரமணி, P | 2250 |
| 194. | பொறி.வேலாயுதம், G | 1742 |
| 195. | மரு. வெங்கடராமன், R | 2250 |
| 196. | மரு. வெண்ணிலா, C | 2177 |
| 197. | மரு. வித்யா, M | 1961 |
| 198. | மரு. விஜயகுமார், G | 2000 |
| 199. | மரு. விஜயானந்த், V | 2020 |
| 200. | மரு. விஜயராணி, K | 3988 |
| 201. | மரு. விக்ரம சக்கரவரத்தி, P | 1617 |
| 202. | மரு. விஷா, P | 2126 |
| 203. | மரு. யசோதை, A | 2084 |
| 204. | மரு. யோகேஸ்வரி, R | 1617 |

Posted on 24.11.2014 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 21.11.2014

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/12-14
Registration No.TN/TBM/32/2012-14

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. D. Thyagarajan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. D. Thyagarajan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2555 4411**
**E-mail : dde@tanuvas.org.in**

# அறிவிப்பு

## பல்கலைக்கழக வெள்ளி விழாப் பயிலரங்கு

ஆசியாவில் முதல் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகமாக, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 1989இல் ஏற்படுத்தப்பட்டது. இப் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா ஆண்டை(2014) கொண்டாடும் வகையில் "முன்னேற்றப் பாதையில்– கால்நடை மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம்" என்ற தலைப்பில் பயிலரங்கு, 2014 டிசம்பர் 22–24ஆம் தேதிகளில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட இருக்கிறது. இந்தப் பயிலரங்கு, கால்நடை மருத்துவ அறிவியல் புலம் சார்ந்த அறிவியலாளர்கள் மற்றும் வல்லுநர்களுடன் பயனுள்ள கலந்துரையாடலுக்கான வாய்ப்பைப் பங்கேற்பாளர்களுக்கு வழங்கும்.

**பதிவாளர்**
தமிழ்நாடு கால்நடை மருத்துவ
அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை 600 051

## பி.டெக். (பால்வளத் தொழில்நுட்பம்) பட்டப் படிப்பு

தமிழ்நாட்டில் முதல் முறையாக, சென்னை கோடுவெளியில் அமைந்துள்ள உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில் நான்காண்டு கால அளவுள்ள பி.டெக் (பால்வளத் தொழில்நுட்பம்) பட்டப் படிப்பு துவங்கப்பட உள்ளது. இப் படிப்பிற்கு +2இல் கணிதம், உயிரியல், வேதியியல் மற்றும் இயற்பியல் பாடப் பிரிவுகள் பயின்றவர்கள் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்கள். இப்பட்டப் படிப்பினை நிறைவுசெய்பவர்கள் ஆவின் மற்றும் பிற தனியார் பால் உற்பத்தி நிலையங்களில் வேலைவாய்ப்பு பெற முடியும். மேலும், சுய தொழில்முனைவோராகவும் ஆகலாம். இப்பட்டப் படிப்பில் ஓராண்டிற்கு 20 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். இது தொடர்பான மேல் விவரங்களுக்குப் பல்கலைக்கழகத்தின் www.tanuvas.ac.in/ugadmission/btechdt.htm இணையத்தளத்தைக் காணவும்.

## பணி ஓய்வு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். திலகர் அவர்கள் 31.10.2014அன்று பணி ஓய்வுபெற்றார். 14.10.1954இல் பிறந்த இவர், 34 ஆண்டும் 06 மாதமும் பணி புரிந்துள்ளார்.



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் அலுவலக உதவியாளர் செல்வி ஏ. விஜயலட்சுமி அவர்கள் 31.10.2014அன்று பணி ஓய்வுபெற்றார். 15.10.1956இல் பிறந்த இவர் 18 ஆண்டும் 04 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைச் சிகிச்சை மருத்துவம், நன்னெறி மற்றும் சட்டவியல் துறையின் உடனாள்(தேர்வு நிலை) திருமதி டி. ராணி அவர்கள் 31.10.2014அன்று பணி ஓய்வுபெற்றார். 10.10.1954இல் பிறந்த இவர் 18 ஆண்டும் 06 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## விருப்பப் பணி ஓய்வு



பல்கலைக்கழகத்தின் நிதி அலுவலக மேலாளர் திரு. டி. பன்னீர்செல்வம் அவர்கள் 31.10.2014அன்று விருப்பப் பணி ஓய்வு பெற்றார். 15.06.1957இல் பிறந்த இவர் 30 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.